**செய்தி வெளியீடு எண்:676** **நாள்: 11.10.2017**

**<u>செய்தி வெளியீடு</u>**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று (11.10.2017) தலைமைச் செயலகத்தில், உள்துறை சார்பில் சேலம் மாவட்டம், மேட்டூரில் 16 கோடியே 68 லட்சத்து 13 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள நிரந்தர காவல் பயிற்சிப் பள்ளி, நிர்வாகக் கட்டடம் மற்றும் 200 காவலர்களுக்கான பாளையம் ஆகியவற்றை காணொலிக் காட்சி (Video Conferencing) மூலமாகத் திறந்து வைத்தார்கள். மேலும், 64 கோடியே 92 லட்சத்து 11 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 381 காவலர் குடியிருப்புகள், 4 காவல் நிலையங்கள், 3 இதர காவல்துறை கட்டடங்கள், 7 ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை அலுவலகக் கட்டடங்கள், 50 சிறைத்துறை குடியிருப்புகள் மற்றும் மாதிரி வெடிகுண்டு அருங்காட்சியகம் ஆகியவற்றை திறந்து வைத்தார்கள்.

மாநிலத்தின் அமைதியைப் பேணிப் பாதுகாப்பது, சட்டம் ஒழுங்கைப் பராமரிப்பது, குற்றங்கள் நிகழாமல் தடுப்பது, குற்றவாளிகளைக் கண்டுபிடித்து தக்க தண்டனை பெற்றுக் கொடுப்பது போன்ற பல்வேறு முக்கிய பணிகளை காவல்துறை ஆற்றி வருகின்றது. இத்தகைய முக்கியத்துவம் வாய்ந்த காவல்துறையின் பணிகள் மேலும் சிறக்க, புதிய காவல் நிலையங்கள் மற்றும் காவலர் குடியிருப்புகளைக் கட்டுதல், காவல்துறை அலுவலகங்களில் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல், ரோந்து பணிகளை மேற்கொள்ள புதிய வாகனங்களை வழங்குதல் போன்ற பல்வேறு திட்டங்களை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வழியில் செயல்படும் தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருகிறது.

அந்த வகையில், சேலம் மாவட்டம், மேட்டூரில் 12 கோடியே 71 லட்சத்து 84 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள நிரந்தர காவல் பயிற்சிப் பள்ளி, 75 லட்சத்து 95 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள நிரந்தர காவல் பயிற்சிப் பள்ளிக்கான நிர்வாகக் கட்டடம், 3 கோடியே 20 லட்சத்து 34 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 200 காவலர்களுக்கான பாளையம், என மொத்தம் 16 கோடியே 68 லட்சத்து 13 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள காவல்துறை கட்டடங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று காணொலிக் காட்சி மூலமாகத் திறந்து வைத்தார்கள்.

மேலும், சென்னை – புது வண்ணாரப்பேட்டையில் 24 காவலர் குடியிருப்புகள், கோயம்புத்தூர் மாவட்டம் – கோட்டூரில் 19 காவலர் குடியிருப்புகள், இராமநாதபுரம் மாவட்டம் – இராமநாதபுரம் நகரம் மற்றும் தொண்டியில் 77 காவலர் குடியிருப்புகள், தேனியில் 14 காவலர் குடியிருப்புகள், திருவள்ளூர் மாவட்டம் – ஆவடி தமிழ்நாடு சிறப்பு காவல் படை 3ஆம் அணியில் 154 காவலர் குடியிருப்புகள், திருநெல்வேலி மாவட்டம் – தாழையூத்தில் 34 காவலர் குடியிருப்புகள் மற்றும் தூத்துக்குடி மாவட்டம் – குலசேகரபட்டிணம் மற்றும் கயத்தாரில் 59 காவலர் குடியிருப்புகள், என 42 கோடியே 77 லட்சத்து 47 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 381 காவலர் குடியிருப்புகள்;

கோயம்புத்தூர் மாவட்டம் – சாய்பாபா காலனி மற்றும் முடீஸ், காஞ்சிபுரம் மாவட்டம் – மகரல் மற்றும் தேனி மாவட்டம் – குமுளி ஆகிய இடங்களில் 3 கோடியே 12 லட்சத்து 55 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 4 காவல் நிலையங்கள்;

அரியலூரில் 1 கோடியே 93 லட்சத்து 88 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள அதிரடிப்படைக்கான பாளையம், மதுரையில் 4 கோடியே 72 லட்சத்து 52 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள ஆயுதப்படைக்கான நிர்வாகக் கட்டடம், திருப்பூர் மாவட்டம் – நல்லூரில் 57 லட்சத்து 60 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள அலுவலகம் மற்றும் சமையலறையுடன் கூடிய நாய் பட்டறை;

சென்னை – ஆலந்தூரில் 5 கோடியே 67 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை சென்னை நகர பிரிவுக்கான 7 அலுவலகக் கட்டடங்கள்;

கோயம்புத்தூர் மத்திய சிறைச்சாலை வளாகத்தில் 2 கோடியே 39 லட்சத்து 99 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 20 சிறைத்துறை குடியிருப்புகள் மற்றும் திருவள்ளூர் மாவட்டம் – புழல் மத்திய சிறை வளாகத்தில் 3 கோடியே 71 லட்சத்து 10 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 30 சிறைத்துறை குடியிருப்புகள்;

சென்னை – மருதம் அதிரடிப்படை வளாகத்தில் 27 லட்சத்து 51 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள மாதிரி வெடிகுண்டு அருங்காட்சியகம்;

என மொத்தம், 81 கோடியே 87 லட்சத்து 75 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டிலான காவல்துறை மற்றும் சிறைத்துறை கட்டடங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று திறந்து வைத்தார்கள்.

மேலும், புதிதாக துவங்கப்பட்டுள்ள தமிழ்நாடு காவல்துறையின் அதிகாரப்பூர்வ முகநூல் பக்கத்தை (Official Face bookpage of Tamil Nadu Police) மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று துவக்கி வைத்தார்கள்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் திரு.சி.வி. சண்முகம், தலைமைச் செயலாளர் முனைவர் கிரிஜா வைத்தியநாதன், இ.ஆ.ப., உள்துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் நிரஞ்சன் மார்டி, இ.ஆ.ப., காவல்துறை தலைமை இயக்குநர் திரு. டி.கே. ராஜேந்திரன், இ.கா.ப., சென்னை பெருநகர காவல்துறை ஆணையர் முனைவர் அ.கா. விஸ்வநாதன், இ.கா.ப., தமிழ்நாடு காவலர் வீட்டுவசதி கழக தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர் திரு. ந. தமிழ்செல்வன், இ.கா.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை – 9.**
**நாள் : 11.10.2017**